## இனிமையான குழந்தைகளே! நாள்தோறும் அமிர்தவேளையில் ஞானம் மற்றும் யோகத்தின் நறுமணத்தைப் பரப்புவீர்களானால் விகாரங்கள் என்ற பூதங்கள் ஓடிப்போகும்.

கேள்வி: எந்த ஒரு மறதி அநேக பூதங்களை உள்ளே பிரவேசம் செய்விக்கிறது?

பதில்: நான் ஆத்மா என்ற விஷயத்தை மறப்பதால் உள்ளுக்குள் அநேக பூதங்கள் பிரவேசமாகி விடுகின்றன. தேக அபிமானத்தின் பூதம் அனைத்திலும் பெரியதாகும். அதன் பின்னால் அனைத்தும் வந்து விடுகின்றன. அதனால் எவ்வளவு முடியுமோ, ஆத்ம அபிமானி ஆவதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள்.

பாடல்: இன்று இருளில் உள்ளது மனித இனம்.......

ஓம் சாந்தி. பாபா வந்து குழந்தைகளுக்கு இந்தப் பாடலைப் பற்றிப் புரிய வைக்கிறார். பகவான் வந்து தம் கண்களுக்கு அவரது சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும் என்று பக்தர்கள் பகவானிடம் விரும்புகின்றனர். இப்போது குழந்தைகள் நீங்களோ முன்னால் அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் ஈஸ்வரனை அடைந்துவிட்டீர்கள். இந்தக் கண்களால் பார்த்திருக்கிறீர்கள். ஈஸ்வரனை எப்படி அடைய வேண்டும் என்பதை அவர் தாமே வந்து சொல்கிறார், அதாவது ஞானம் தருகிறார். இந்த (பிரம்மாவின்) உடல் மூலமாகப் புரிய வைக்கிறார். குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் கூட இந்த உடல் மூலமாக அவரவர் பார்ட்டை நடிக்கிறீர்கள். சரீரம் இல்லாமலோ யாரும் பார்ட்டை நடிக்க முடியாது. பார்ட்டை ஆத்மா தான் சரீரத்தின் மூலமாக நடிக்கின்றது. சரீரத்தின் பெயரும் வித விதமாக வைக்கப்படுகின்றது. ஆத்மாவோ ஒன்று தான், ஆத்மா தானே சொல்கிறது, மேலும் பாபாவும் புரிய வைக்கிறார்- 84 பிறவிகளை ஆத்மா எடுக்கின்றது. ஆத்மா சொல்கிறது, நான் ஒரு சரீரம் விட்டு வேறொன்றை எடுக்கிறேன். சரீரமோ சொல்லாது இல்லையா? இப்போது குழந்தைகள் நீங்களோ அறிந்து கொண்டு விட்டீர்கள், நாம் ஆத்மா தான், சரீரமல்ல. பாபா வந்து நம்மை ஆத்ம அபிமானி ஆக்குகிறார். இந்த சரீரத்தின் மூலம் ஆத்மா தான் அனைத்தையும் செய்கிறது. சரீரத்தினுள் இருக்கும் ஆத்மா சொல்கிறது, இந்த சரீரத்தின் மூலம் நான் நடமாடிக் கொண்டிருக்கிறேன். நான் ஆத்மா, நீதிபதி, வக்கீல் முதலானவர்களாக ஆகிறேன். ஆத்மா சொல்கிறது, நான் இந்த சரீரத்தின் மூலம் இராஜயோகம் கற்றுக் கொள்கிறேன். பிறகு போய் இராஜா ராணியின் ஆடைகளை (சரீரத்தை) அணிந்து கொள்வேன். இப்போது நீங்கள் ஆத்ம அபிமானி ஆக்கப்படுகிறீர்கள். தேக அபிமானத்தில் வருவது தான் முதல் நம்பர் பிழையாகும். இதனால் பிறகு மற்றப் பிழைகளும் ஏற்படுகின்றன. இது தேக அபிமானத்தின் பூதம் எனச் சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் நிச்சயமாக 5 பூதங்கள் உள்ளன. பூதங்களை விரட்டுவதற்காகத் தான் அகர்பத்தி ஏற்றி வைக்கப் படுகின்றது. இந்த 5 விகாரங்களுக்காக உள்ளது, ஞானம் யோகம் என்ற அகர்பத்தி. இவை ஒன்றும் சீக்கிரமாக ஓடி விடுவதில்லை. அவர்கள் பட்டியில் வைக்கப்படுகிறார்கள். ஏனென்றால் இந்த 5 விகாரங்கள் மிகவும் பழைய விரோதிகள். பாபா சொல்கிறார், குழந்தைகளே, உங்களுக்குள் இந்த பூதங்கள் பிரவேசமாகி அரைக்கல்பம் ஆகி விட்டது. அப்போ திருந்து இராவண இராஜ்யம் நடைபெற்று வந்துள்ளது. நிச்சயமாக பாரதவாசிகள் இராவணனை விரோதி என உணர்ந்து

எரிக்கின்றனர். ஒரு முறை (முந்தைய கல்பத்தில்) இவனுடைய அழிவு நேரிட்டதால் தான் இப்போது மீண்டும் எரிக்கின்ற அந்த வழக்கம் இருந்து வந்துள்ளது. இச்சமயம் நீங்கள் இந்த 5 விகாரங்கள் மீது வெற்றி பெற்றிருந்தீர்கள். இராவணன் அதனால் அழிந்து விட்டிருந்தான்-அரைக்கல்பத்திற்கு. குழந்தைகள் பிறகு கேட்கின்றனர், பாபா, இவன் மீண்டும் எப்போது உயிருடன் வருவான்? குழந்தைகளே, மீண்டும் அரைக் கல்பத்திற்குப் பிறகு உயிருடன் வருவான். தனது இராஜ்யத்தை நடத்துவான். இராமராஜ்யம் வேண்டும் எனச் சொல்கின்றனர் இல்லையா? ஆக, இப்போது எந்த இராஜ்யம் உள்ளது? இராவண இராஜ்யம் அல்லவா? சத்யுகத்தில் இராவண இராஜ்யம் இருக்காது. அங்கே இராம ராஜ்யம் இருக்கும். நல்லது, இராம ராஜ்யத்தின் முதல்-முதலில் இராஜா ராணியாக யார் இருந்தார்கள்? இதையும் யாரும் அறிந்திருக்கவில்லை. இராம்-ராம் எனச் சொல்கின்றனர் என்றால் இராமரை (சீதா-இராமனை) மேலே கொண்டு போய் விட்டனர். கிருஷ்ணரைக் கீழே கொண்டு வந்து விட்டனர். இதனால் சத்யுகத்தைப் பற்றியோ அவர்களுக்கு எதுவுமே தெரியாது என்றாகிறது. நீங்கள் கண்காட்சிகளிலும் எழுதி வையுங்கள்-ஒவ்வொரு மனிதருக்குள்ளும் 5 பூதங்கள் பிரவேசமாகியுள்ளன. குறைந்தது 7 நாட்கள் பட்டியில் இருந்தால் அப்போது இந்த பூதங்கள் அனைத்தும் ஓடிப்போகும். அதற்கு ஞானம், யோகம் என்ற ஊதுபத்தி வேண்டும். அவை இல்லாமல் ஒரு போதும் முக்தி ஜீவன்முக்தி பெற முடியாது. இந்த ஞானம் மற்றும் யோகத்தின் இன்ஜெக்ஷன் ஒரே ஒரு சர்ஜனிடம் தான் உள்ளது. இப்போது இந்த ஞானம் ஆத்மாவுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆத்மா புரிந்து கொண்டுள்ளது, பாபா நமக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். வேறு எந்த ஒரு மொழியிலும் பரமபிதா பரமாத்மா எங்களுக்குப் படிப்பு சொல்லித் தந்து கொண்டிருக்கிறார் என்று இது போல் சொல்ல மாட்டார்கள். பகவான் தாமே நிராகார் என்றால் குழந்தைகளும் நிராகாரமாக உள்ளனர். நிராகார் பகவான் இந்த சாகார் பிரம்மா மூலம் ஜீவ ஆத்மாக்களுக்கு ஞானம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதை நீங்கள் நல்லபடியாக அறிவீர்கள். ஆனால் போகப்போக அநேகக் குழந்தைகள் மறந்து போகின்றனர். மறப்பதற்கும் முதன்-முதல் காரணம் தேக அபிமானம் என்ற பூதம் ஆகும். அதனை விரட்டுவதற்கு அமிர்தவேளையில் தான் புருஷார்த்தம் செய்ய வேண்டும். அமிர்த வேளையில் பாபாவின் நினைவு நன்றாக இருக்கும். நினைத்து நினைத்து சுகம் பெறுங்கள் எனச் சொல்கின்றனர். அமிர்தவேளையின் விதிமுறை தான் இது. பக்தர்களும் கூட அமிர்த வேளையில் நினைவு செய்கின்றனர். அதிகாலையில் இராமரை நினை மனமே.... என்று ஆத்மா புத்திக்குச் சொல்கிறது. பக்தி மார்க்கத்திலோ இது போல் மந்திரங்களை உருவாக்குகின்றனர். அவை ஒன்றும் உண்மையானதாக இல்லை. காமம் கூட பூதம் என்பதைப் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் எழுத முடியும்-அனைவருக்குள்ளும் 5 பூதங்கள் உள்ளன. முதல் நம்பர் தேக அபிமானம். பிறகு இரண்டாவது நம்பர் காமம் என்ற மிகப்பெரிய விரோதி. முன்பு பள்ளிக்கூடத்திலும் கற்பித்தனர்- நீங்கள் 5 தத்துவங்களால் ஆன ஆத்மாவாக இருக்கிறீர்கள். ஆத்மா அழியாதது, சரீரம் அழியக் கூடியது. இப்போதோ இந்தப் படிப்பு முதலியவை எதுவும் இல்லை. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு முழுமையான அறிமுகம் கொடுக்கப் படுகின்றது. குடியரசுத் தலைவரை நிச்சயமாகக் குடியரசுத் தலைவர் என்று தான் சொல்வார்கள். பிரதம மந்திரியைப் பிரதம மந்திரி என்பார்கள். இருவரின் செயல்கள் தனித்தனியாக

இருக்கும். அது போல் பரமபிதா பரமாத்மா, பிறகு திரிமூர்த்தி, அவர்களின் செயல்களும் அவரவருடையதாக இருக்கும். சிவனைப் பதீத பாவனர் என்றே சொல்கின்றனர். அவர் பிரம்மா மூலமாக தூய்மை இல்லாதவர்களை தூய்மை படுத்துகிறார் இது அவருடைய கடமையாக உள்ளது. இப்போது பெரியவரிலும் பெரியவராக இருப்பவர் சிவன். சிவபாபா ஒரு போதும் பிறப்பு இறப்பில் வருவதில்லை. மற்றப்படி பிரம்மா மூலம் சேவை செய்கிறார். சிவபாபா சதா தூய்மையாக இருப்பவர். பிரம்மா விஷ்ணு புனர்ஜென்மத்தில் வருகின்றனர். சிவபாபாவோ செய்பவர் செய்விப்பவர். இச்சமயம் பாபா இனிய (தேவி-தேவதா தர்ம) மரத்தின் கன்றை நட்டுக் கொண்டிருக்கிறார். யார் மற்ற தர்மங்களில் மாறிப்போய் இருக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் வெளியேறி வந்து விடுவார்கள். ஆக, இவ்வளவு ஞானத்தையும் புதியவர்கள் யாரும் புரிந்து கொள்ள முடியாது. 7 நாள் பட்டியில் இருப்ப தல்லாமல் யாரும் முக்தி ஜீவன்முக்தி அடைய முடியாது. நீங்களும் கூட பூதங்களை வெளி யேற்றுவதற்காக எவ்வளவு முயற்சி செய்திருக்கிறீர்கள்! புத்தி தூய்மையாக இருக்கும் போது தான் ஞான அமிர்தம் தங்க முடியும். குழந்தைகள் நீங்கள் புரிந்து கொள்ள முடியும், நிச்சயமாக பாபாவின் நினைவு மறந்து போகிறது. அதிக தேக அபிமானம் வருவதால் பிறகு உற்றார்-உறவினர் முதலானவர்களிடம் அன்பு போய் விடுகின்றது. யாருக்கும் மோகம் என்ற பூதம் வரக்கூடாது. பாபாவிற்கு எவ்வளவு ஏராளமான குழந்தைகள்! மோகத்தின் விஷயமே கிடையாது. ஆத்மா ஒரு போதும் அழிவதில்லை என்பது தெரியும். இறப்பதற்குத் தான் பயமாக உள்ளது. ஆத்மாவும் அழிவற்றது, பரமாத்மாவும் அழிவற்றவர். அவர் பிறப்பு-இறப்பில் வருவதில்லை. பாபா சொல் கிறார், நான் இந்த (பிரம்மாவின்) சரீரத்தை கடனாக எடுக்கிறேன். என்னுடையவராக இருப்பதால் இவருக்கு அதிக நன்மை உள்ளது. இவருடைய ஆயுள் அதிகரித்து விடுகிறது. மணமுள்ள மலராக மாறி விடுகிறார். இவருடைய அனைத்துக் குறைபாடுகளையும் போக்கி முற்றிலும் புதியவராக ஆக்கி விடுகிறேன். பாபாவோ சுகமளிக்கும் வள்ளல். என்னால் இவர் யோகம் கற்றுக் கொள்கிறார். அதனால் தான் ஆரோக்கியமானவராக ஆகி விடுகிறார். யாரையாவது நிந்தனை செய்வது, கோபப்படுவது இதெல்லாம் அசுர சுபாவங்களாகும். சத்யுகத்தில் இந்த நிந்தனை முதலானவை இருப்பதில்லை. ஹெவன், வைகுண்டம், பாரடைஸ் எனச் சொல்கின்றனர். பெயரே எவ்வளவு முதல்தரமானதாக உள்ளது. கிறிஸ்துவிற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு பாரதம் சொர்க்கமாக இருந்தது. இந்தக் கணக்கின் படி நிச்சயமாக 5000 ஆண்டுகள் தான் ஆகியுள்ளன. இந்த சத்திய ஞானம் மற்றும் சத்திய நாராயணனின் கதை எவ்வளவு சுலபமானது! நாம் இப்போது சத்திய நாராயணன் ஆவதற்கான சத்திய கதை, இராஜயோகத்தின் கதையைக் கேட்டுக் கொண்டிருக் கிறோம். பிறகு இங்குள்ள விஷயம் பக்தி மார்க்கத்திற்குச் சென்று விடுகின்றது. அதிசயம் இல்லையா? லட்சுமி நாராயணன் தான் இராதை கிருஷ்ணராக இருந்தனர் என்பது பாரதவாசி களுக்குத் தெரியாது. அதனால், மனிதர்கள் புரிந்து கொள்வதற்காக நாம் இந்தச் சித்திரங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறோம். குழந்தைகளாகிய உங்கள் சென்டர்கள் அதிகமாகிக் கொண்டே உள்ளன. அநேகர் சென்டர் திறக்க விரும்புகின்றனர். சோதித்துப் பார்க்க வேண்டும் எத்தனைப் பேர் வந்து படிப்பார்கள்? பள்ளிக்கூடத்தில் மாணவர்களோ வேண்டும் தானே? முதலில் 2, 4 பேர் செல்வார்கள், பிறகு அதிகமாகி விடும். ஒவ்வொரு தெருவிலும் கோவில், சத்திரம் போன்றவைகளைத் திறந்து கொண்டே உள்ளனர். பிறகு ஒருவர்

மற்றவரைப் பார்த்து ஏராளமாக வந்து விடுகின்றனர். சென்டர் திறப்பதற்கு யாரேனும் வேண்டும். திறப்பதற்குத் தடை இல்லை. ஆனால் விகாரத்தின் காரணத்தால் விக்னங்கள் அநேகம் வருகின்றன. நாமோ கீதை தான் கேட்கிறோம். ஆனால் ஆரம்பத்தில் இருந்தே இந்த (விகார) விஷத்தின் காரணத்தால் சண்டை நடந்து கொண்டே இருக்கிறது. இங்கே செல்வதால் விஷக் கோப்பை கிடைக்காது என்பது தெரியும். இதனைப் பற்றி மீராவின் இதிகாசமும் உள்ளது. அது போல அநேகக் கன்யாக்கள் மற்றும் பாலகர்கள் பிரம்மச்சாரியாக உள்ளனர். அவர்களையோ யாரும் எதுவும் சொல்வதில்லை. இங்கோ கல்பத்திற்கு முன்பும் கூட நிந்தனை அடைந்துள்ளனர். இவ்வாறு நடக்கத் தான் செய்யும். சிலரோ தூய்மையின் உறுதிமொழி எடுக்கின்றனர். பிறகு தோல்வியடையவும் செய்கின்றனர். கல்ப-கல்பத்தின் லாட்டரியாகும். இதில் சோதிக்கப் படுகின்றது எது வரை ஆஸ்தி பெறுகின்றனர், பிறகு அதே போல கல்ப கல்பமாகப் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். எங்காவது காமம் (விஷம்) கிடைக்காத காரணத்தால் பிறகு கோபத்தில் வந்து துன்பம் கொடுக்கின்றனர். கஷ்டங்கள் அநேகம் உள்ளன, அடிக்கவும் செய்கின்றனர். பிறகு புரிந்து கொண்டார்கள் என்றால் மன்னிப்புக் கேட்கவும் செய்கின்றனர். பிறகும் அபகாரிக்கு உபகாரம் செய்ய வேண்டியுள்ளது. நல்லது, இனி புருஷô்ர்த்தம் செய்யுங்கள் எனச் சொல்வார்கள். அபகாரிக்கு உபகாரம் செய்து உயர்த்துவது சிறந்ததாகும். இரக்க மனம் உள்ளவராக ஆக வேண்டும். முதல்-முதலில் ஆத்ம அபிமானி ஆவதில் தான் முயற்சி உள்ளது. தேக அபிமானியாக இருப்பதால் பாபாவை மறந்து விடுகின்றனர். பிறகு தவறுகள் நடந்து கொண்டே இருக்கும். ஒவ்வொருவரின் நடத்தை மூலம் புரிந்து கொள்ள முடியும். வாயிலிருந்து எப்போதும் ஞான ரத்தினங்களே வெளிப்பட வேண்டும். உங்கள் பெயரே ரூப் பஸந்த (யோகி ஞானி). பாபாவும் ரூப்-பஸந்த், ஞானக்கடல் மற்றும் அவருடைய வடிவமும் ஜோதிர்லிங்கம் எனக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் நட்சத்திரமாக உள்ளார். பூஜைக்காகப் பெரிய உருவமாக வைக்கப்பட்டுள்ளது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) முதல் முதலில் ஆத்ம அபிமானி ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். தேக அபிமானத்தில் ஒரு போதும் வரக் கூடாது. இரக்க மனம் உள்ளவராகி அபகாரிக்கும் உபகாரம் செய்ய வேண்டும்.

2) பூதங்களை விரட்டுவதற்காக அமிர்தவேளையில் விசே‘மாக நினைவில் இருப்பதற்கான புருஷார்த்தம் செய்ய வேண்டும். இனிய (தேவி தேவதா தர்ம) மரத்தின் கன்றை நடுவதில் பாபாவிற்கு உதவியாளர் ஆக வேண்டும்.

வரதானம் : எல்லையற்ற வைராக்கிய விருத்தி மூலம் எனது என்பதன் இராயல் ரூபத்தை முடிவடையச் செய்யக்கூடிய விடுபட்டவர், அன்பானவர் ஆகுக.

நேரத்தின் அருகாமையின் அனுசாரம் நிகழ்கால சமயத்தின் வாயுமண்டலத்தில் எல்லையற்ற வைராக்கியம் வெளிப்படையான

ரூபத்தில் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். அனை வருடைய சம்பந்தம், தொடர்பில் எந்தளவு விடுபட்ட நிலை உள்ளதோ, அந்தளவு அன்பான நிலையும் இருப்பதுவே யதார்த்தமான வைராக்கிய விருத்தி என்பதன் அர்த்தம் ஆகும். யார் விடுபட்டு, அன்பாக இருக்கின்றார்களோ, அவர்கள் நிமித்தமானவர்களாக மற்றும் பணிவானவர் களாக இருப்பார்கள், அவர்களிடம் எனது என்ற உணர்வு வர முடியாது. தற்சமயம் எனது என்பது இராயல் ரூபத்தில் அதிகரித்துவிட்டது - இது என்னுடைய வேலையே, என்னுடைய இடம், எனக்கு இந்த அனைத்து சாதனங்களும் பாக்கியத்தின் அனுசாரம் கிடைத்திருக்கின்றன, . . . என்று சொல்வார்கள். எனவே, இப்பொழுது அப்படிப்பட்ட இராயல் ரூப எனது என்பதை முடிவடையச் செய்யுங்கள்.

சுலோகன்: பரசிந்தனையின் பிரபாவத்தில் இருந்து விடுபட வேண்டுமென்றால் சுப சிந்தனை செய்யுங்கள் மற்றும் பிறருக்காக சுப சிந்தனை செய்பவராக ஆகுங்கள்.

மாதேஸ்வரி அவர்களின் விலைமதிப்பற்ற மகாவாக்கியம்

பிராமண குலமாகிய நம்முடைய சிறிய உலகம்

பாடல்: பாருங்கள், என்னுடைய இந்த சின்னஞ்சிறிய உலகத்தை.... இந்த பாடல் ஏதோவொரு சமயத்தில் பாடப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த சங்கமயுக சமயமே நம் பிராமண குலத்தின் சிறிய உலகமாகும். அது நம்முடைய எத்தகைய குடும்பம்? அதை வரிசைக்கிரமமாகச் சொல்கின்றார்கள். நாம் பரமபிதா பரமாத்மா சிவனுடைய பேரக் குழந்தைகள். பிரம்மா, சரஸ்வதியினுடைய வாய்வழிக் குழந்தைகள் மற்றும் விஷ்ணு, சங்கரர் நம்முடைய பெரியப்பா ஆவார்கள், மேலும், நாம் அனைவரும் நமக்குள் சகோதர, சகோதரிகள் ஆகி விட்டோம். இதுவே நம்முடைய சிறிய உலகம் . . . இதற்கு மேல் வேறு எந்த உறவும் இல்லை. இந்த சமயத்தின் சம்பந்தம் இவ்வளவே என்று சொல்லலாம். பாருங்கள், நம்முடைய சம்பந்தம் எவ்வளவு பெரிய அத்தாரிட்டியுடன் உள்ளது! சிவன் நம்முடைய தாத்தா ஆவார், இவர் பெயர் எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது! அவர் முழு மனித சிருஷ்டியின் விதைரூபம் ஆவார். அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்பவராக இருக்கும் காரணத்தினால், அவர், ஹர ஹர போலாநாத் (துக்கத்தைப் போக்கும் கள்ளம் கபடமற்றவர்), சிவன் தேவர்களுக்கெல்லாம் தேவன் மகாதேவன் என்றும் அழைக்கப்படுகின்றார். அவர் முழு உலகத்தின் துக்கத்தைப் போக்குபவர், சுகம் கொடுப்பவர். அவர் மூலம் நமக்கு சுகம், சாந்தி, தூய்மைக்கான பெரிய உரிமை கிடைக்கிறது, சாந்தியில் பிறகு எந்த கர்ம பந்தனத்தின் கணக்கு வழக்கும் இருக்காது. ஆனால், இந்த இரண்டும் தூய்மையின் ஆதாரத்தில் உள்ளன. எதுவரை தந்தையினுடைய பரிபாலனையின் முழுமையான ஆஸ்தியைப் பெற்று தந்தை யிடமிருந்து சான்றிதழ் பெறவில்லையோ, அதுவரை அந்த ஆஸ்தி கிடைக்க முடியாது. பாருங்கள், பிரம்மாவிற்கு எவ்வளவு பெரிய பொறுப்பு உள்ளது. 5 விகாரங்களால், அழுக்கான, தூ்ய்மையற்ற ஆத்மாக்களை மலராக ஆக்குகின்றார், இந்த அலௌகீக காரியத்தின் பலனாக சத்யுகத்தின் முதல் நம்பர்

ஸ்ரீ கிருஷ்ணன் என்ற பதவி கிடைக்கிறது. இப்பொழுது பாருங்கள், அந்த தந்தையுடன் உங்களுக்கு எவ்வளவு சம்பந்தம் உள்ளது! எனவே, எவ்வளவு கவலையற்று மற்றும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்! நான் பூரணமாக அவருடையவராக ஆகி விட்டேனா? என்று இப்பொழுது ஒவ்வொருவரும் தன்னுடைய உள்ளத்தில் கேட்க வேண்டும். நல்லது. ஓம் சாந்தி.